# இந்துசாதனம்.

# THE HINDU ORGAN.

சோமவாரத்திலும் குருவாரத்திலும் பிரசுரமாகும்.

"எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு, மான்ற பெருமை தரும்."

பத்திரிக் கிரயம்.

| | | |
|---|---|---|
| யாழ்ப்பாணப் பட்டினம்: | ஆ 1-க்கு | ரூ. 5-60 |
| வெளியூர், இந்தியா: | ,, | ரூ. 9-40 |
| தொலைவாய்ப்பகுதி: | ,, | ரூ. 9-40 |
| தனிப்பிரதி: | | சதம் 6 |

முற்பணம் அனுப்புவோருக்கே பத்திரிகை அனுப்பப்படும்.

விளம்பர விகிதம்.

| | | |
|---|---|---|
| முதன் முறைக்கு:—ஒருகலம் | | ரூ. 9-40 |
| ,, | அரைக்கலம் | ரூ. 5-00 |
| ,, | கால்கலம் | ரூ. 3-15 |
| ,, | ஒரு அங்குலம் | சதம் 65 |

அடுத்த முறைகட்கு மேற் விகிதங்களிற் பாதி. விளம்பரங்கள் முற்பண மனுப்பினாலன்றிக் கவனிக்கப்படா.

புத்தகம்—௩எ } யாழ்ப்பாணம்:— குரோதன ஸு ஆடி மீ உசுஉ (1925 ஆகஸ்ட் 10) திங்கட்கிழமை. { இலக்கம்—கஉ.


உ
கணபதி துணை.

சீர்பூத்த கருவிநா லுணர்ச்சி தேங்கச்
சிவம்பூத்த நிகமாக மங்க ளோங்கப்
பார்பூத்த புறச்சமய விருள்க ணீங்கப்
பரம்பூத்த சைவநிலை பாரோர் தாங்கப்
பேர்பூத்த சிவானந்தத் தினிது தூங்கப்
பிறைபூத்த சடைமவுலிப் பிரானார் தந்த
வார்பூத்த வறிவிச்சை தொழிலென் றோது
மதம்பூத்த விநாயகன்றாள் வணங்கிவாழ்வாம்.

வாழ்க வந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.


தேசப்பெரியார்கள்
அநேகர் விரும்பி உபயோகிக்கும்
சமையல் அடுக்கு

ருக்மணிகுக்கர்தான்.

கனம் எட்டியாபுரம், ராஜா, டாக்டர் வரதராஜுலுநாயுடு முதலிய அநேக கனவான்களால் நன்குமதிக்கப்பட்டுள்ளது. இதனால் ஒருமணிக்குள் சஞ்சடமில்லாமல் சாதம் 4, 5 பதார்த்த வகைகள் செய்யலாம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அளவு | ஒருவர் | 2 | 4 | 6 | 8 பேர். |
| விலை | ரூபா | 13. | 18 | 22 | 27 33. |

விபர புத்தகம் இனாம். ஏஜண்டுகள் தேவை.
இன்றே ஒரு குக்கர் வாங்குங்கள்.

ருக்மணி குக்கர் கம்பெனி,
(Y. 45.) இராயபுரம், மதராஸ்.



[ESTABLISHED 1609.]

MESSRS. A. S. M. A. KHADER BROTHERS
Kairul Muslimeen Medical Hall
PORTONOVO (SouthArcotDistrict).

ஏ ஜ ண் டு தே வை.

குழிக்கப்போய் சேற்றைப் பூசிக்கொள்வதுபோல்
வீண் ஆரவாரமான விளம்பரங்களைக் கண்டு மிரண்டுவிடாதீர்கள்.
அடியிற் கண்ட லேகியத்திற்காக ரூபா 1000 இனுமளிக்கப்படும்.

இந்த லேகியம் சாப்பிட்ட 3மணி நேரத்திற்கெல்லாம் சப்த தாதுக்களின் பலத்தையும் வீரிய உற்சாக தத்துவத்தையு மடைவிக்கச் செய்யவில்லையென்றுவது பரீட்சைசெய்யும் அன்பர்களுக்கு பலனைக் கொடுக்கவில்லையென்றுவது கடவுளுக்குப் பொதுவாய் சொல்லுகிறவர்களின் பணத்தை உடனே வாப்ஸ் கொடுத்துவிடப்படும்.

அசல் பாகம் சந்தோஷிக்கச் செய்வது
உ த் த ர வா த மு ள் ள து.

## சித்தஜானந்த சிட்டுக்குருவி லேகியம்.

இந்த லேகியம் முற்காலத்து மன்னர்களால் உபயோகித்து வீரியசக்தி குறையாது இல்லற இன்பவாழ்க்கையையடைந்து புத்திர பௌத்திர சம்பன்னராய் நீடூழி வாழும்பொருட்டே நமது முன்னோர்களால் கூறப்பட்ட பழைய எட்டுப்பிரதிகளிலுள்ள ஔஷத பாகங்களிற் சிறந்ததும், இரத்தவிர்த்தி, வீரியவிர்த்தி, அறிவுவிர்த்தி, சந்தானவிர்த்தி முதலிய நலன்களை அடையக்கூடியதுமான ஒப்பற்றஓர்புருஷசஞ்சீவியாகின்றது. மற்றவிபரங்களை நமதுகேட்லாக்கில்காணலாம்.

லேகியத்தின் முக்கிய குணமாவது.

வாத பித்த சிலேத்ம பிருதி குறைவால் ஏற்படும் இரத்தக்குறைவு, எழுவகைத்தாதுக்களின் பலஹீனம், அஸ்தி வெட்டைச்சூடு, பிரமேகவெட்டை, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, நீர்ச்சுருக்கு, நீரெரிச்சல், நீர்த்தாரை பெருத்தல் ஆகிய நோய்களையும், நித்திரையில் அடிக்கடி உண்டாகும் தாதுநஷ்டம், நித்திரைப்பங்கம், SPERMATORRHEA, தேகமெலிவு, சதாஇடுப்புவலி, கைகாலசதி, மலச்சிக்கல், பசிமந்தம், தேகத்தில் பலவிடங்களிலும் ஓடித்திரியும் பலவித வாய்வுகள், நெஞ்சுவலி, NERVOUSDISEASES, ஆகிய நோய்களைச் சுகப்படுத்தி, புதியமேனியுடன் இரத்தவிர்த்தி, வீரியவிர்த்தி, சந்தானவிர்த்தி முதலிய நலன்களைப் பெறுவதில் இதைவிடச் சிறந்த மருந்து [illegible] அரிதினுமரிது. [illegible] ச்சிறந்த அபூர்வலேகியத்தின் ஆச்சரிய குணத்தை உடனே [illegible] நன்மைக்காக இதனை மிகவும் குறைந்த விலைக்கு வெளியிட்டிருக்கிறோம்.

40 நாள் சாப்பிடும் பெரியடப்பி 1-க்கு விலை ரூபா 8—0—0.
20 நாள் சாப்பிடும் சிறியடப்பி 1-க்கு விலை ரூபா 4—0—0.
வி. பி. தபாற் செலவு பிரத்தியேகம்

முற்பணமனுப்பினால் V. P. தபாற்செலவு இனாம். பினங்கு, சிங்கப்பூர், சிலோன், கோலாலம்பூர், பேரா முதலிய பிறதேசவாசிகள் மருந்தின் கிரயமும், தபால்சார்ஜு ரூபா 2ம் சேர்த்து முற்பணமனுப்பி மருந்து பெறவேண்டும். மேற்கூர்களுக்கு வி. பி. யில் அனுப்பப்படமாட்டாது.

இச்சிறந்த லேகியமானது சிட்டுக்குருவியின் கிருதம் அதாவது மேற்குருவியின் சத்தால் செய்யப்படவில்லையென்றுவது, அல்லது இந்த லேகியத்தைச் சாப்பிட்டால் குணமொன்றுஞ் செய்யவில்லையென்றுவது கடவுளுக்குப் பொதுவாய் ரூபிப்பவர்களுக்கு அவர்கள் கொடுத்த மருந்தின் கிரயமும் ரூபா 1000 இனாமாயும் கொடுக்கப்படும். அப்படி ரூபித்தும் இனாமுடையபணமும் கிரயமும் கொடுபடா விட்டால் கோட்டுமூலமாக வசூல்செய்துகொள்ளலாம். அதனதியும் மற்றக் கம்பெனியாரின் இத்தகையான குருவிலேகியங்களுக்கு இப்படிப்பட்ட ஆச்சரியகுணமுண்டென்றுவது, அல்லது இச்சிறந்த குண பாக லேகியத்தைச் செய்து காட்டினாலாவதுமுன் கண்ட இனாம் கொடுக்கப்படுமென்பதற்கு உத்திரவாதமளிக்கப்படும்.

TEL. ADDRESS:—
Khader Bros,
Porto Novo.
(Y. 38).

என்மேல்விலாசம்:—
மெஸ்ஸர்ஸ் ஏ. எஸ். எம். ஏ. காதர் பிரதர்ஸ்,
கைருல் முஸ்லிமீன் வைத்தியசாலை,
பறங்கிப்பேட்டை, தென்னாற்காடு ஜில்லா.



Hakeem, M. Mohamed Ebraheem & Co;
HAMEETHIA AYURVEDIC UNANI
MEDICAL HALL.
POTO-NOvO (South India)

அருமைத் துரைகளே! பொறுமையாய்க் கவனியுங்கள்!

இழந்துபோன பலத்தையும், நலத்தையும், நரம்புத் திடத்தையும்
அதி அற்புத ஆச்சரியமான சுக சக்தியையும் இது
உபயோகித்த ஒரே வேளையில் தெரிந்துகொளளலாம்.

ஆயிரக்கணக்கான நற்சாக்ஷிக் கடிதங்களும்
தங்க மெடல்களும் பரிசு பெற்ற
முதன் மோஹன

## சிட்டுக் குருவிச் சத்தின் லேகியம்.

அசல் பாகம்! ——o—— அருமையானது!!

பரீக்ஷைக்கும் பலனுக்கும் உத்தரவாதமுள்ளது. இந்தப் பாகம் சரியாக வேறு எந்தக் கம்பெனியார்களும் செய்து காட்டினாலும் அல்லது இது நாங்கள் உண்மையான பாகப்பிரகாரம் சரியாக செய்யவில்லை என்று ருஜுவித்தாலும் சரியே அவர்களுக்கு எங்கள் கம்பெனியால் ரூபா 1000 இனாம் கொடுக்கப்படும்.

அன்பின் மிக்குள நண்ப சிகாமணிகளே!

அருமையும், அனுபவமும், பெருமையும், பிரபல்யமும், மஹா அற்புத ஆச்சரிய சக்திகளும் வாய்ந்த இந்த அசல் "முபற்று" லேகியத்தை உபயோகிக்கும் உத்தமர்கள் இல்வாழ்க்கையிலே நாம் என்றுங் கண்டிராத சித்தானந்த பெயரா சித்சுகவிளைய நலன்களையும், சில அற்புத குணங்களையும் தெரிந்துகொள்வார்கள். ஆஹா! குணத்தால் சிறந்த இந்திரலோகத்திய "மகாசஞ்சீவினி" இதுதானோ? என்றும் பன்முறையும் புகழ்வார்கள். ஆனைப் பிறந்து இவ்வுலகத்தில் வளர்ந்து இளம் பால்யப் பருவத்திலேயே குருநோய்வாய்ப்பட்டுக் கெட்டும், இன்னும் பலவித காரணங்களினாலும் தேகத்திற்கு சத்காரணமாகிய நல்லிரத்தத்தை வீண்விரயஞ்செய்தும், நல்ல வாலிபப் பருவத்தில் வாத பித்த சிலேற்பன பிருதிக் குறைவாலும், எலும்புருக்கி முதலான வெப்புரோகங்களினாலும் ஜீவரத்ன பீடமாகிய தேகம் தளரப்பெற்றவர்களும், வித்திராபங்கம் என்னும் ஓர்வித கொடிய நோயினால் எப்பொழுதுஞ் சஞ்சலப்பட்டுக்கொண்டிருப்பவர்களும், சுரம் பிரமேகம் விஷப்பாண்டு முதலிய வியாதிகளால் இரத்தம் கரைந்து சர்வ நாம்புகளுந் தளர்ந்து ஐம்புலன்களின் உற்சாகமும் குறைந்து, ஞாபகசக்திக் குறைவு, கை கால் அசதி, தேகசோர்வை, இடுப்புவலி, பசிமந்தம், மலச்சிக்கல் முதலிய வியாதிகளால் சதா வருந்துவோரும்,

மனோ தத்வ புத்திசாதுர்யத்தைக் கொண்டு வேலைசெய்யக்கூடிய லாயர்கள், குமாஸ்தாக்கள், பாடலீகர்களும், மற்றும் ஞாபகசக்தியால் வேலையையுடைய, எந்தத் தொழிலாளர்களும் இதனை உபயோகித்தால் நல்ல உற்சாகமும், சந்தோஷமும் அடைவார்கள். திடமான தேகக் கட்டுப்பாட்டையும், புதிய மேனியையும், இரத்தவிர்த்தி ஞாபகவிர்த்தி சந்தானவிர்த்தி முதலிய சர்வ நலன்களையும் பெறுவார்கள். தாருட்யசக்தியின் குறைபாட்டினால் ஏற்பட்ட பலவிதமான நோய்களினாலும், பீடிக்கப்பட்டு இரவும் பகலும் அதுவே கவலையிலானவர்களுக்கு திட்டமாக குணம் செய்வதில் இது மகா வல்லமையும் பேரும் பிறகீர்த்தியும் பெறறது. இதனை பரிக்ஷிக்கும் ஒவ்வொரு நண்பர்களுக்கும் தப்பாமல் குணம்செய்யும். சத்தியமான சித்தானந்த யோகபாகம் இதுதான என்று நாம் சொல்லவேண்டியதில்லை. பனனும் நலனும் சில அற்புத ஆச்சரிய வல்லமெய்க் குணங்களும் ஒரே வேளையில் தெரியும். கண்டாலே தெரியும் காக்ஷி! தின்றாலே தெரியும் திடன்!! இத்தகைய குணங்கள் இதில் இல்லையென்று சத்தியமாகச் சொல்லுகிறவர்களுக்கு எமது கம்பெனியிலிருந்து ரூபா 1000 இனாம் கொடுக்கப்படும். பரிக்ஷை செயயவும். உபயோக விபரம் கூடவே வரும்.

அன்பர்களுக்கோர் அறிவிப்பு:—

இக்காலத்தில் சில போலி வைத்தியர்கள் கிளம்பி பலவித இமிட்டேஷன் லேகியங்களையே மேற் சிட்டுக்குருவி லேகியமென்று விற்று வருகிறார்கள். ஆகையால் அத்தகைய லேகியங்களைத் தருவித்து மோசம்போய்விடாமல் நமது விலாசத்தைக் கவனித்து எழுதவேண்டியது. மேற் முழுபாகம் தருவிப்பவர்களுக்கு உசித இரசமணி 1 இனாம்.

| | | |
|---|---|---|
| | 40 நாள் மருந்து 16 பலம் டப்பி 1-க்கு விலை ரூபா | 10—0—0 |
| | 20 நாள் மருந்து 8 பலம் டப்பி 1-க்கு விலை ரூபா | 5—0—0 |
| பரிக்ஷைக்கு | 10 நாள் மருந்து 4 பலம் டப்பி 1-க்கு விலை ரூபா | 3—0—0 |

வி. பி. தபால்செலவு முதலியன முழுபாகத்திற்கு அணா 12ம், அரைபாகத்திற்கு அணா 7ம், கால்பாகத்திற்கு அணா 5ம் பிரத்தியேகம். மருந்தின் கிரயத்தை முன்பணமாக அனுப்புகிறவர்களுக்கு போஸ்டிங் சார்ஜ் இனாம்.

☞ கவனிப்பு—பினாங்கு, சிங்கப்பூர், குவாலாலம்பூர், செட்டாஸ், மோரீஸ் முதலிய வெளிப்பிர தேசங்களில் உள்ளவர்கள் மருந்தின் கிரயமும், தபால் செலவு ரூபா 2ம் சேர்த்து முன்பணமாக மணியாடர் அல்லது போஸ்டல் ஆர்டராக அனுப்பியே மருந்து பெறவேண்டும். நமது விலாசம்:—

ஹக்கீம், எம். முஹம்மது இபுருஹீம் அன்ட் கம்பெனி,
மானேஜர், ஏ. முகம்மது யூசுபு,
ஹமீதியா ஆயுர்வேத யூனானி வைத்தியசாலை,
(Q. 63). பறங்கிப்பேட்டை (தென்னிந்தியா).



# அதிசிரேஷ்டமான தைலம்.


சாசகண்டிப்பான மனுஷனோ ஸ்திரீயோ சரியென மதிக்கும்படியான அநேக முக்கிய சரக்குகள் சேர்ந்த தைலம்

லிட்டில்ஸ் ஓரியன்றல் பாம்.

இதர தைலங்களைவிட இது ஏன் சிரேஷ்டம்?

1. நோவைக் குணமாக்கும் 12 திவ்விய சரக்குகள் சேர்ந்தது.
2. அவைகளின் சாரத்தை அது தன் திட—திராவ மூல காரணத்திலடக்கி வைத்திருக்கிறது.
3. அதில் வீணாய்ப்போகும் தன்மையே கிடையாது.
தினையளவு தைலம் பனையளவு குணத்தைத்தரும்.
4. அதில் அன்னியபொருள் சேர்ப்பில்லை.
5. அதில் மிருகக்கொழுப்பேயில்லை.
6. அது குணஞ்செய்யும் குணமுடையது.

3—L—25.




(Y. 41. A.)

# இந்து சாதனம்

யாழ்ப்பாணம்:— குரோதன ளு ஆடிமீ உகஉ திங்கட்கிழமை.


## யாத்திரை செய்வோரின் பிரயாணச் சங்கடம்.

கதிர்காமயாத்திரையின் பொருட்டு இங்கிருந்து புகைரதமார்க்கமாகப் புறப்பட்ட அடியார்கள் பட்டகஷ்டத்தைப்பற்றி முன்னரும் அறிவித்துள்ளோம். யாழ்ப்பாணப் புகைரதஸ்தானத்திலே மூன்றும் வகுப்புப் பிரயாணிகள் வண்டிகளுட் சொருகப்பட்ட முறைகளைப்பற்றியும் கூறியுள்ளோம். இந்த ஸ்தானத்தலைவர் யாத்திரை செய்வோருடன் நடந்துகொண்ட முறைகளையிட்டு நாம் பெரிதும் வருந்துகின்றேம். வருடந்தோறும் யாத்திரைகாரர் இந்தப்புகைரதஸ்தானத்திற் கஷ்டப்படுவதை நாம் அறிவோம் என்றேன்றைக்கும் இந்தஸ்தானத்தைத் தமது சொந்தமாக உபயோகிக்கும் ஸ்தானத்தலைவரும் நன்கறிவர். பிரயாணிகள் அதிகமாக நிற்பதையும் வண்டிகள் போதாதிருப்பதையும் கண்ட ஷை தானத்தலைமைஉத்தியோகத்தர் சாவகச்சேரி கொடிகாமம் பளை முதலான இடங்களுக்குச் செல்வோரைக் கொழும்புக்குப் போகும் புகைவண்டியிற் செல்லாது தடுத்து, பின்னுற்றொடர்ந்து செல்லும் புகைவண்டியிற் பிரயாணஞ்செய்ய விடலாமே? இங்ஙனம்செய்வதில்இவ்வுத்தியோகத்தருக்கு யாதும் சிரமமில்லையே. அன்றியும் ஒரு சில பிரயாணிகளுடன் செல்லும் முதலாம் இரண்டாம் வகுப்புவண்டிகளிலும் இந்த மூன்றும் வகுப்புப் பிரயாணிகளைச் செல்லவிடலாமே? அங்ஙனம் செய்யாது தம்மாலானமட்டும் சொருகக்கூடியவர்களை மூன்றும்வகுப்பு வண்டிகளுட் சொருகிய பின், மேடையில் எஞ்சி நிற்பவர்களைப் பார்த்து "நீங்கள் நில்லுங்கள்; நாளைக்காலையிற் புறப்படும் வண்டியில் உங்களை அனுப்பி வைப்பேன்" என்று இவ்வுத்தியோகத்தர் கூறுவது நீதியாகுமா? இவரது கூற்றிலிருந்து புண்ணியத்துக்காகப் பிரயாணிகளைத் தமது செலவில் இவர் அனுப்பிவைப்பது போலத் தெரிகின்றது. இங்குள்ள மக்களின் பிரயாண வசதிக்காக அமைக்கப்பட்ட புகைரதஸ்தானத்தில் நாம் கொடுக்கும் பணத்தின் ஒரு சிறுபாகத்தை வேதனமாகப்பெற்றுக் கடமைபார்க்கும் இவ்வுத்தியோகத்தர் தாம்கடப்பாடுண்டுசெய்யவேண்டியவற்றைப் புண்ணியத்தின்பாற்படுத்தவொண்ணுது. பிரயாணம் செய்யும் எமக்காகவே அவர் அங்குத்தங்கி எமக்குவேண்டிய வசதிகளைச் செய்து தமது வேதனத்தையும் பெறுதல் கூடும். இந்த உண்மையை எமது ஸ்தானத்தலைவர் நன்குணருதல்வேண்டும்.

இனி, கிரயங்குறைந்த பிரயணச்சீட்டுப் பெற்றுச் செல்வோர் இடையிலே இறங்கவொண்ணுதென விதிக்கப்பட்ட ஒருமுறைகேடான பிரமாணம் பற்றி யாத்திரை செல்வோர்பலர் தாம்செல்லும்மார்க்கங்களிலுள்ள மருதானை, கொழும்பு, வெள்ளவத்தை, பாணந்துறை களுத்துறை முதலான இடங்களில் வசிக்கும் நண்பர்களுக்குத் தமது பிரயாணத்தைப்பற்றியும் எதும் போசனம் கொண்டுவந்து புகைரதஸ்தானத்திற் கொடுக்கும் படியும் தெரிவித்துள்ளார் நண்பர் போசனத்துடன் தத்தம் இடத்துள்ள புகைரதஸ்தானத்திற்கு வந்து பிரயாணிகளைக் காத்து நின்றனர். சிலர் தமக்கு அறிவித்துள்ள பிரயாணிகளைக்காணுது அவர்களைக் குறைகூறி மீண்டனர். யாத்திரை செல்வோரும் நண்பரும் இங்ஙனம் இடர்ப்பட்டமைக்கு இந்தஉத்தியோகத்தரேகாரணராவர்.

நான்கு ஐந்துமைல் தூரத்துக்கப்பாலுள்ள கிராமங்களிலிருந்து புகைரதமார்க்கமாகப் பிரயாணம் செய்யவருவோர் புகைரதம் புறப்படுவதற்கு இரண்டொரு மணித்தியாலத்துக்குமுன் ஸ்தானத்துக்கு வருவது வழக்கம். அங்ஙனம் வருவோர் தாம் வந்த வண்டியை உடனே திருப்பிவிடுவதும் வழக்கம். இவர்கள் புகைரதத்திற் பிரயாணஞ்செய்யாது தடுக்கப்படுவரேல் என் செய்வர்? அங்குத் தங்கி நிற்கவுமிடமில்லை. பின் ஓர் வண்டியமைத்து வீண்செலவுடன் வீட்டுக்குத் திரும்பினும் மறுநாட்காலையிற் புறப்படும் புகைரதத்திற் செல்லுதலும் அதிக கஷ்டமாகும். இவற்றையெல்லாம் இவ்வுத்தியோகத்தர் ஏன் சிந்திக்கவில்லை?


**யாழ்ப்பாணப் பட்டின பரிபாலன சங்கம்.**

பட்டின பா[illegible]லன சங்கத்தின்

எட்டாம் வட்[illegible]ரப் பிரதிநிதியாக

**ஸ்ரீ. மு. தா[illegible]மாதரம்பிள்ளை**

(மாமா[illegible]தம்பி)யைத்

த[illegible]செய்து

தெரிவு [illegible]செய்யுங்கள்.

(Q. 66)


கதிர்காம உற்சவ தரிசனம் செய்த அடியார்களுட் பெரும்பாலார் சென்ற புதன்[illegible] இரவு மாத்துறைப்புகைரத ஸ்தா[illegible]துக்குத்திரும்பி வந்தனர். அப்பொ[illegible] மழைத்தூறலும் குளிர்காற்றும் அதிக[illegible]விருந்தன. புகைரதஸ்தானத்துள்ள வெ[illegible]க் கதவுகள் பூட்டப்பட்டிருந்தன. சனங்கள[illegible] அரவங்கேட்டு ஷை ஸ்தானத்தலைவரா[illegible] மிஸ்ரர். பி. ஜே ஆபிரகாமவர்கள் த[illegible] வீட்டிலிருந்து புறப்பட்டு அங்கு வந்து[illegible]தார்; சனங்கள் கஷ்டப்படுவதைக் க[illegible]டார்; கதவுகளைத்திறந்து விடும்படி அங்குள்[illegible] தமது வேலையாட்களுக்குக் கட்டளையிட்டார். கதவு திறக்கப்பட்டவுடன் சனங்கள் அந்தஸ்தானத்திலே சிறிதுமிடமின்றி நிறைந்தார்கள். பின்னரும் நூற்றுக்கணக்கானோர் பஸ்வண்டிமார்க்கமாக அங்குவந்து குழுமினர். மிஸ்ரர் ஆபிரகாம் அவர்களைப் புகைரதவண்டிகளுட்டங்கும்படி கேட்டுக்கொண்டார் சனங்கள் அவரது பெருந்தன்மையையும் சீவகாருண்ணியத்தையும் பெரிதும் மெச்சினுர்கள்.

மறுநாட்காலை மூன்றும்வகுப்பு வண்டிகளெல்லாம் ஒருவர் நிற்கத்தானு மிடமின்றி நிறைந்தன. இருநூறுபேருக்கு அதிகமானோர் பிரயாணம் செய்யும்மார்க்கமின்றி மேடையில் நின்று தியங்கினுர்கள். நாமும் நண்பர் இருவரும் மிஸ்ரர் பி. ஜே. ஆபிரகாமிடம் சென்று பிரயாணிகள் இடமின்றி வருந்துவதுபற்றிக் கூறினேம். அவர் எம்முடன் மேடைக்கு வந்து மூன்றும் வகுப்பு வண்டிகளிற் சனங்கள் நிறைந்திருப்பதையும் நூற்றுக்கண[illegible]னோர் இடமின்றி மேடையில் நிற்பதையுங் கண்டு, ஒரு சில பிரயாணிகளுடன் இருக்கும்முதலாம் இரண்டாம் வகுப்பு வண்டிகளில் எல்லோரையும் ஏறும்படி அனுமதிகொடுத்தார் மேடையில் நின்றோர் ஷை ஸ்தானத்தலைவரை வாழ்த்தியபின் முதலாம் இரண்டாம் வகுப்பு வண்டிகளுட் புகுந்து பிரயாணம் செய்தார்கள். இந்த ஸ்தானத்தலைவரே பிரயாணிகளின் வசதிக்காக உத்தியோகம் வகிப்பவராவர். இந்த மாத்துறைப் புகைரதஸ்தானத்தலைவரைப்போன்று நமது யாழ்ப்பாண ஸ்தானத்தலைவரும் சனங்களாற் பாராட்டப்படாமைபற்றி மிகவும் விசனிக்கின்றேம். மாத்துறை யாழ்ப்பாணம் என்னு மிரு புகைரதஸ்தானங்களும் இலங்கைப் புகைரதப் பகுதியாரின் கீழ்த்தானே இருக்கின்றன. அங்குமிங்குமுள்ள பிரமாணங்களும் ஒரேமாதிரியாகத்தானே இருத்தல்வேண்டும். இங்ஙனமேல்லாமிருத்தலினுல் வயதினுலும் அறிவினுலும் உத்தியோகத்தினுலும் கண்ணியமுற்று விளங்கும் நமது உத்தியோகத்தர் மிஸ்ரர் ஆபிரகாம் அவர்களுடைய பரோபகாரப் பெருங்குணத்தைப் பின்பற்றி இனியேனும் யாத்திரைகாரருடைய வசதியைச் சிறிது சிந்தித்து ஒழுகுவாரெனக் காத்திருக்கின்றேம்.

## சுந்தரமூர்த்திநாயனுர் சிவஸ்தலயாத்திரை.

எமது சமயாசாரியராகிய தம்பிரான் தோழர் திருவாரூரிலே சாதுசங்கத் தலைவராய் விளங்கினர். சிவனடியார்கூட்டம் தினந்தோறும் அதிகரித்தது. பங்குனி மாத உத்தரத் திருநாள் சமீபித்தது. அதன்பொருட்டு அதிக பணம் வேண்டியிருந்தமையினுல் அவர் சமீபத்திலுள்ள திருப்புகலூருக்குச் சென்று சுவாமிதரிசனஞ் செய்து பரவையாருக்கு அதிக பொன் கொடுப்பதற்கு யாது செய்யலாம் என்னும் கவலையுடன் ஆலயத்துச் சந்நிதியிலே அடியார் கூட்டத்துடன் தங்கினுர். "ஆண்டான்" என்னும் ஒப்புயர்வில்லாத திருப்பெயர் புனைந்துள்ள சிவபெருமான் தம்மால் வலிந்து ஆண்டு அடிமைக்கொள்ளப்பெற்ற வன்றொண்டருக்கு அனுக்கிரகஞ் செய்யத் திருவுளங்கொண்டார். திருவருள் வசத்தால் அவருக்கு நித்திரை வந்தது. எமது நாயனுர் அங்குத் திருப்பணியின்பொருட்டு வைக்கப்பட்டிருக்கும் செங்கற்கள் பலவற்றைத் தலைக்கணையாக்கித் தமது உத்தரியத்தை அதன்மேல் விரித்துத் துயின்றூர். அவர் துயில் நீங்கி எழுந்து பார்த்தபோது அச்செங்கற்களெல்லாம் பொற்கற்களாகவிருக்கக் கண்டார்; திருவருளின் பெருமையை அறிந்தார்; அன்று அடிமைக்கொண்ட ஆன்மநாதர் தம்மை என்றுங் காப்பரென்பதை இவ்வனுபவத்திற பூரணமாகக் கண்டார்; அதி விரைவாக எழுந்து ஆலயத்துட் சென்றூர்; "தம்மையே புகழ்ந் திச்சை பேசினும்" என்னும் சொற்றொடரையுடைய தேவாரத் திருப்பதிகம் பாடினுர். அப்பதிகப் பாடல் ஒவ்வொன்றிலும் "அன்பர்களே! பிறவிப்பெருங்கடல்வாய்ப் பட்டுழலும் மக்களை ஒருபோதும் பாடாதொழிவீர்!! எல்லாம் வல்ல பரம்பொருளாகிய சிவபெருமானை என்றும் இடையீடின்றிப் பாடிப் போற்றுங்கள். அங்ஙனம் செய்வீர்களேல் இம்மையில் இட்டசித்திகளைப் பெறலாம். மறுமையிலும் என்றும் அழியாத பேரின்பவீட்டையடையலாம்" எனக் குறிப்பிட்டருளினர். அப்பால் எமது சமயாசாரியர் அப் பொற் கற்களையெல்லாம் பரவையாரது திருமாளிகைக்கு எடுப்பித்துச் சென்றூர்.

நாயனுர் அங்கிருந்து புறப்பட்டுப் பல சிவஸ்தலங்களையும் வணங்கிப் பதிகம் பாடிக்கொண்டு செல்லும்போது இடையிலுள்ளதாகிய திருமழபாடிக்குச் செல்லாது திருவாலம்பொழிலை அடைந்து இரவு அங்குத் துயின்றூர். சிவபெருமான் அவருக்குச் சொப்பனத்திலே தோன்றி "மழபாடிக்கு வருதற்கு மறந்தனையோ" எனக் கூறி மறைந்தருளினுர். நாயனுர் விழித்தெழுந்து அதி விரைவாகக் காவிரி நதியைக் கடந்து மழபாடியை அடைந்தார்; அங்கு ஆலயத்தை வலமாக வந்து "பொன்னுர் மேனியனே" என்னும் சொற்றொடரையுடைய திருப்பதிகம்பாடியருளினுர். அப்பாடலின் ஈற்றில் "மன்னே, மாமணியே, மழபாடியுள் மாணிக்கமே, அன்னே யுன்னையல்லால் இனி யாரை நினைக்கேனே" என அருளிச்செய்தார் பின்னர் திருவானைக்காவுக்குச் சென்றூர். அங்குச் சுவாமி தரிசனஞ் செய்யும்பொருட்டுச் சென்ற சோழராசன் காவிரிநதியில் ஸ்நானஞ்செய்தபோது, அவன் மார்பில் அணிந்துள்ள விலையுயர்ந்த பதக்கம் நீரில் வழுவியது. அரசன் "சிவபெருமானே தேவரீர் அதனை அணிந்தருளும்" என்றுன். அருச்சகர் திருமஞ்சனத்தின்பொருட்டுக் காவிரிநதியில் தீர்த்தம் எடுத்துச்சென்று சுவாமிக்கு அபிஷேகஞ் செய்யும்போது அப்பதக்கம் சிவலிங்கப்பெருமான்மீது பொருந்தியது. திருவருள்வசத்தால் இங்ஙனம் நிகழ்ந்தமை அவ்வரசன் உத்தம சிவபத்தன் என்பதை இனிது காட்டுகின்றது. எமது சமயகுரவர் அரசனுடைய பத்திநிலையைச் சிறப்பித்து "தாரமாகிய பொன்னி" என்னுஞ் சொற்றொடரையுடைய தேவாரப்பதிகத்தை அருளிச்செய்தனர்.

தம்பிரான் தோழர் திருப்பைஞ்ஞீலி முதலான தலங்களை வணங்கிக்கொண்டு திருப்பாண்டிக்கொடுமுடியை அடைந்தார். அங்கு "மற்றுப்பற்றெனக்" என்னும் சொற்றொடரையுடைய திருப்பதிகம் பாடியருளினுர். அப்பாடல்கள் ஒவ்வொன்றின் ஈற்றிலும் "உனை நான் மறக்கினுஞ் சொல்லுநா நமச்சிவாயவே" எனக் குறிப்பிட்டருளினுர். (மகா மந்திரங்களுக்கெல்லாம் மேலாய் விளங்கும் இச் ஸ்ரீபஞ்சாட்சரத்தை நாம் இடைவிடாது செபித்து வருவோமாயின் அது "குலந்தரும்; நிதிமிக்க குணந்தரும்; வேதம் சொல்லும் பலந்தரும்; உயர்ந்த சாயுச்சியந் தரும்; எல்லாம் வல்ல நலந்தரும்; நிறைந்த செல்வ நலந்தரும்; பெருமை குன்று நயந்தரும்" என எமது சமயநூலார் கூறும். இதன் உண்மையை உள்ளவாறுணர்ந்த எமது சமயாசாரியர் தாம் அதனைச் செபியாது மறந்திருக்கும் காலத்தும் "நாவே! நீ எப்பொழுதும் ஸ்ரீ பஞ்சாட்சரத்தைச் செபிக்குதி" யென்றுரென்பதாம்).

## கதிர்காம மகோற்சவம்.

இவ்வருடம் கதிர்காம உற்சவம் மிகவும் சிறப்பாக நடைபெற்றது நாநாபக்கங்களிலுமிருந்து பல்லாயிரக்கணக்கான சிவனடியார்கள் அங்குச் சென்று சுவாமிதரிசனம் செய்து சிவசுப்பிரமணியப்பெருமானு[illegible]ய திருவருட் பிரசாதத்தைப்பெற்று மீண்டனர். இவ்வருடம் அங்குமழை சிறிதுமில்லை "ஹரஹர" என்னும் பேரொலியும் வீபூதி உருத்திராக்கம் முதலிய சிவசின்னங்களைத் தாங்கிய அடியார் மாட்சியும், பல்லாயிரக்கணக்கான கருப்பூரதீபக்காட்சியும் இத்துணைத்தென்று சொல்லும் தரத்தனவல்ல. வைராக்கியமுள்ள அன்பர் சிலர் தீப்பாய்ந்தனர். சிலர் கதிர்காமத்தையன் சந்நிதியிற் கழுத்தறுத்தனர். ஒருவருடைய கழுத்து அதிகமாக அறுக்கப்பட்டமையினுல் அவர் இறந்தாரென அங்குச் சமுகமாய் நின்ற ஏசன்றரவர்கள் கூறினர். அரசாட்சி வைத்தியர் ஒருவர் இவர் பிழைப்பதில்லையெனக் கூறிச் சென்றனர். இச்செயற்கரும் செய்கை செய்தவர் நான்காநாட் பூரணசுகம் பெற்றுர். ஏசன்றரவர்கள் அவரைப்பன்முறை பரீட்சித்துப் பரிசு வழங்கினர். விஷபேதி முதலான தொற்றுநோய்கள் உண்டாகாதபிரகாரம் சுகாதாரப்பகுதியார் தகுந்த ஒழுங்குகள் செய்திருந்தனர். இருவர் விஷபேதியினுற் பிடிக்கப்பட்டனராம் நவீன உடை நடை பாவனைகளும் விபரீதக்கோள்கைகளும் சிலஅடாத துர்க்கருமங்களும் அங்குச் சிறிது சிறிதாகத் தலைகாட்டத்தொடங்கிக் கொண்டன. இத்துர்க்கருமங்கள் அங்கு நிகழாத பிரகாரம் பாதுகாத்துக் கொள்ளுதல் சைவநன்மக்கள் ஒவ்வொருவர் மீதும் பொறுத்த பெருங் கடனுகும்.

## மாத்துறைத் தமிழர் சங்கம்.

இச்சங்கம் சென்ற பல வருடங்களாக மாத்துறை வழியாய்க் கதிர்காமம் செல்லும் அடியார்களுக்கு அரிய பெரிய திருத்தொண்டு புரிந்து வருகின்றது. இருபது இருபத்திரண்டு மணிநேரமாகப் புகைரதத்திற் பிரயாணம் செய்து பசியினுலும் தாகத்தினுலும் வருந்தி அங்குச்செல்லும் அன்பர்களுக்கு அது ஒரு கற்பகவிருட்சம்போலிருக்கின்றது. சைவர்களாகிய நாம் சிறிதுவேளை தங்கி ஸ்நானம் போஜனம் முதலியன முடித்துக் கொள்வதற்கு ஏதொரு வசதியுமில்லாத இந்த மாத்துறையில் இச்சங்கம் பூர்வபுண்ணியவசத்தாற் செய்யும் செயற்கரும் திருத்தொண்டையிட்டு நாம் பெரிதும் மகிழ்ச்சியடைகின்றேம் இச்சங்கம் அங்குச் செல்லும் அடியார்களை அன்புடன் உபசரிக்கும் அருமையும், அவர்களுக்குத் தம்மாலான உதவிசெய்யுந் திறமையும், மோட்டார்பஸ் வண்டிகளை அமைத்துக்கொள்வதில் அடியார்களுக்குச் சிறிது சிரமந்தானும் ஏற்படாவண்ணம் தக்கவாறு ஒழுங்குசெய்து அவர்களை வழிவிட்டனுப்பும் பெருமையும் மிகவும் போற்றத்தக்கன. இச்சங்கம் என்றும் இத்திருத்தொண்டை ஆற்றிச் சிவசுப்பிரமணியப் பெருமானது பூரண கிருபாகடாட்சத்தைப் பெறும்வண்ணம் திருவருளைப் பிரார்த்திக்கின்றேம்.

## நூல்களைப்பற்றியகுறிப்பு.

### தேவாரத்திரட்டு.

இது காரைநகர் பிரமஸ்ரீ. மு. சபாரத்தின ஐயரவர்களால் தொகுக்கப்பட்டு ஷை யூர் மாணிக்கவாசக யந்திரசாலையிற் பதிப்பிக்கப்பட்டது. இதில் தேவாரம் திருவாசகம் திருவிசைப்பா திருப்பல்லாண்டு திருப்புராணம் திருப்புகழ் என்னுமிவை சேர்க்கப்பட்டுள்ளன. பிரதி ஒன்றன் விலை சதம் பத்து.

### நூறு பலவகைத் தனித் தேவாரங்கள்.

இதுவும் காரைநகர் பிரமஸ்ரீ. மு. சபாரத்தின ஐயரவர்களால் தொகுக்கப்பட்டு மாணிக்கவாசக யந்திரசாலையிற் பதிப்பிக்கப்பட்டது. பிரதி ஒன்றன் விலை சதம் 20.

### திண்ணபுரவந்தாதி.

இது காரைநகர் கார்த்திகேயப்புலவரவர்களால் இயற்றப்பட்டது. ஷை யூர்ச் சுப்பிரமணிய வித்தியாசாலைத் தலைமையாசிரியர் பிரமஸ்ரீ. ச. பஞ்சாக்ஷர ஐயரவர்கள் இயற்றிய அரும்பத விளக்கத்துடன் பிரமஸ்ரீ. சபாரத்தின ஐயரவர்களால் அச்சிடப்பெற்றது. பிரதி ஒன்றன் விலை சதம் 25. பிரதிகள் பிரமஸ்ரீ. மு. சபாரத்தின ஐயரவர்களிடம் பெறற்பாலன. எமக்கனுப்பிய பிரதிகளை உவந்தேற்றும்.

## வெள்ளவத்தைத் திருக்குறட் பயிற்சிக் கழகம்.

இந்த ஆடி மீ" கூஉ (28-7-25) செவ்வாய்க்கிழமை மேற்படி சமூகத்தாரால் எமது சமயகுரவருள் ஒருவராகிய சுந்தரமூர்த்திநாயனாருடைய குருபூசையும் நாயனாரது திவ்விய சரிதப் பிரசங்கமும் மிகவுஞ் சிறப்பாக நடாத்தப்பெற்றன.

## நால்வர் மரணதண்டனை விதிக்கப்பெற்றனர்.

சென்ற வெள்ளிக்கிழமை கொழும்புச் சுப்பிறீங் கோட்டிலே, கொலைக் குற்றஞ் சாட்டப்பட்ட பெடி அப்புகாமி, பொடிசிங்கோ, ஜோன் சிங்கோ, டேவிட்சிங்கோ என்னும் நால்வரும் விசாரணை செய்யப்பட்டு மரண தண்டனை விதிக்கப் பெற்றார்கள்.

## பொலிஸ்தலைவன் சிறைக்குச் சென்றமை.

கொழும்பிலே பாக்கியராஜா வென்னும் பொலிஸ்தலைவன், இன்ஸ்பெக்டர் பொலிஸ்தானத்தின் சொந்தக்காரருக்குக் கொடுக்கும்படி கொடுத்தனுப்பிய பணத்தை ஏமாற்றஞ்செய்து எடுத்துக்கொண்டமைக்காகத் தொடரப்பட்ட வழக்கிலே மூன்றுமாசக் கடூழியச்சிறை விதிக்கப்பட்டான்.

## பரிதாபமான மரணம்.

தெகிவலையைச்சேர்ந்த கிராமம் ஒன்றில் கமக்காரன் ஒருவன் தனது வேலையினின்றும் வீட்டுக்குச் சென்றபோது ஓர் நாகம் அவனைக் கடித்தது. அதன் நச்சுப் பல்லு மிகவும் ஆழமாக மாட்டிக்கொண்டமையால், சிறிதுநேரம் அவனுடன் இழுவுண்ட பின்னரே அது அவனினின்றும்பிரிந்தது. கமக்காரன் சிறிதுநேரத்தின்பின் இறந்துபோனான்.

## புதிய தேசாதிபதி.

இலங்கைப்புதியதேசாதிபதியாக நியமனம்பெற்ற சேர் கியூச் கிளிபோர்ட் அவர்கள்வருகிறடிசம்பர்மாசத்திலே இலங்கைக்கு வருவாராம். இவர் புறப்படும் "ஆக்ஸ்போர்ட்ஷையர்" என்னும் கப்பல் வருகிற நவம்பர் மீ" ௬ உலிவர்ப்பூல்என்னுந்துறைமுகத்திலிருந்துபிரயாணமாகும். தேசாதிபதி மார்சலிஸ்என்னுமிடத்திற்கப்பலேறுவார். டிசம்பர்மாசம் முதலாந்திகதி கப்பல் கொழும்புத் துறைமுகத்தை யடையும் என்று சொல்லப்படுகின்றது.

## தந்தி பயிலும்மாணவர் பரிக்ஷை.

சென்ற மேமாசம் நிகழ்ந்த தந்திபயிலும் மாணவர் பரீக்ஷையிற் சித்தியடைந்தோர், A. கனகசபை, D. G. எட்வின், A. கதிரித்தம்பி, J. ஜான்ஸ், R. சேனாதிராஜா, T. A. W. குணவர்த்தன, R. நடராஜா, P. சுப்பிரமணியம், C. V. பர்னாண்டோ, K. A. ஜோசேப் K. செல்லையா, J. டேவிற், T. செல்வத்துரை, T. காராளசிங்கம், H. I. D. சில்வா, K. வைத்தியலிங்கம், K. முருகையா, E. G. D. அல்விஸ், A. J. பிரகாசம், V. இராமநாதன் முதலியோராவர்.

## வைத்திய கல்லூரிப் பரீட்சை.

இக்கல்லூரியின் கடைசிப் பரீட்சையில் V. நடராசா, C. பொன்னம்பலம், P. K. சண்முகம் என்னும் மூவர் சித்தியடைந்து அரங்கேறினர். இடைப் பரீட்சையில் G. E. கன்டி, R, கந்தையா, R. சோமசுந்தரம், J. S B. குமாரகுலசிங்கம், C. T. செல்லையா, M. J. A. சந்திரசேகரம் என்போரும், முதற் பரீட்சையிலே P. T. இராமகிருஷ்ணன், V. T. ஜோசேவ் என்போரும் அநுகூலமடைந்தனர். "அப்போதிக்கரி" முதலாம் பரீட்சையிலே L. தேவேந்திரம், S. வைரவநாதன், S. காசிநாதன் என்போரும் 2-ம் பரீட்சையில் E. சின்னத்துரை, K. தம்பையா, V. இளையதம்பி என்போரும் அநுகூலமடைந்தனர்.

## நியாயப்பிரமாணப் பரீட்சை.

சிலவாரங்களுக்கு முன்னர்நடைபெற்ற நியாயப்பிரமாணப் பரீட்சையின் பேறு வெளிவந்திருக்கிறது. அப்புக்காத்து மார்க்குரிய முதற் பரீட்சையில், 10 பேர் சித்தியடைந்தனர். அவருள் மிஸ்ரர் J. M. வன்னியசிங்கம், மிஸ்ரர் S. சுப்பிரமணியம், மிஸ்ரர் A. ஞானப்பிரகாசம் என்போர் மூவருந் தமிழர்.

பிறக்றர்மாருக்குரிய முதற்பரீட்சையிற் சித்தியடைந்தோர் 26 பேர். அவருள் மிஸ்ரர் W. A. A. கனகரத்தினம், மிஸ்ரர் M. கனகசிங்கம், மிஸ்ரர் T. S. குணரத்தினம், மிஸ்ரர் C. தனபாலசிங்கம், மிஸ்ரர் V. M. குருசாமி, மிஸ்ரர் S. V. ஜெகநாதசிங்கம், மிஸ்ரர் T. பாலகிருஷ்ணன் என்போர் தமிழர்.

## சிசுகர்த்தி.

சென்ற வாரம் எழுதுமட்டுவாளில் பாறுபதியென்னுமொருத்தி தான்பெற்ற சிசுவை உயிரோடு புதைத்துவிட்டாளென அடி யூர் விதானை சாவகச்சேரிக் கோட்டில் முறையிட்டிருந்தார். புதைத்த இடத்தைத்தோண்டிப் பிள்ளையையெடுத்துப் பார்த்தபோது அதன் வயிற்றினுள்ளும் தொண்டையினுள்ளும் மணல் காணப் பட்டதாம்.

## பாணந்துறைக் கொலைவழக்கு.

பாணந்துறையில் டக்டர் H. V. பர்னாந்து என்னுமொருவரும் அவருடைய தொழிற்சாலையில் வேலைசெய்யும் வேறிருவரும் ஜேம்ஸ் என்னும் வண்டிக்காரனொருவனைக்கொலை செய்தனரெனக் குற்றஞ் சாட்டப்பட்டு விசாரணை செய்யப்படுகின்றனர். எதிரியாகிய டக்டர் பக்க நியாயவாதியாக, பேர்பெற்ற நியாயதுரந்தரராகிய மிஸ்ரர் எட்லி கோட்டன் வருகின்றாராம்.

## லேசர் சுரேந்திரநாதபனர்ஜி தேகவியோகமாயினர்.

வாக்குச்சாதுரியத்தில் தமக்கு ஒப்பாரும் மிக்காருமின்றி விளங்கியவரும் "வங்காளி" என்னும் பத்திரிகையாசிரியராக விருந்தவரும் வங்காள மந்திரியாக விருந்தவரும் ஒருகாலத்தில் வங்காளத்தின் முடிசூடா மன்னரென அபிமானிக்கப்பட்டவருமாகிய லேசர் சுரேந்திரநாதபனர்ஜியவர்கள் இந்த ஆகஸ்ட் மீ" ௬உ கல்கத்தாவில் தேகவியோக மாயினரென அறியலானேம்.

## வித்தியாபகுதியார் வித்தியாசாலைக் கட்டடங்களுக்கு உதவிய நன்கொடைப் பணம்.

இலங்கைவித்தியாபகுதியார் 1914-ம் வருடம்வரையிலுள்ள பத்துவருட காலத்தில் இலங்கையிலுள்ள கிறிஸ்தவ வித்தியாசாலைகளின் கட்டடங்களுக்கு ரூபா 222,990-ம், இந்து வித்தியாசாலைகளின் கட்டடங்களுக்கு ரூபா 12,300-ம், புத்த வித்தியாசாலைகளின் கட்டிடங்களுக்கு ரூபா 27800-ம் நன்கொடையாக அளித்திருக்கின்றனர்.

## கிரயமின்றிப் பிரயாணஞ்செய்வோர்.

இலங்கைப் புகையிரதத்திலே கிரயமின்றி உத்தியோகமுறையிற் பிரயாணம் செய்வோர் தொகை 1702 ஆகும். முதல் வகுப்பில் பிரயாணம் செய்துவருவோர் 202. இரண்டாவது வகுப்பிற் பிரயாணம் செய்துவருவோர் 781. மூன்றுவது வகுப்பில் 719. இங்ஙனம் கிரயமின்றிப்போக்குவரவு செய்வோர் சட்டசபை அங்கத்தவர், அவர்கள் வேலைக்காரர் மற்றும் சில உத்தியோகஸ்தர்கள் புகைரதத் தொழிலாளர் முதலியோராம்.

## அரசாங்க பரிபாலனச் செலவுத்திட்டம்.

சட்டநிரூபணசபையின் தெரிவு செய்யப்பட்டகழகத்தார் நிகழ்த்திய விவாதத்தின் பயனுய் வருகிற வருட அரசாங்க பரிபாலனச் செலவுத் திட்டத்திலே எட்டு லட்சம் ரூபா குறைக்கப்பட்டிருக்கின்றது. துறைமுகப்பகுதிச் செலவிலேயே அதிகமான தொகை குறைக்கப்பட்டது. கட்டடத் தலைவராக இங்கிலாந்திலிருந்து அழைக்கப்படும் ஒருவருக்கு இடப்பட்டிருந்த சம்பளத்திட்டம் நீக்கப்பட்டு, இலங்கையிலுள்ள ஒருவரையே வருடம் ரூபா 3600 தொடக்கம் ரூபா 5100 வரையிலுள்ள சம்பளத்தில் நியமனம் செய்வதற்கு ஒழுங்கு செய்யப் பட்டது.

## புகைரதப்பகுதியும் யாத்திரிகர்களும்.

இவ்வருடத்திலே கதிர்காமம் என்னும் சைவ ஸ்தலத்திலும், கண்டி அநுராசபுரம், டொண்டிரு (தேவேந்திரபுரம்,) முத்துயங்கனு, ஆகிய நான்கு புத்த ஸ்தலங்களிலும் ஏககாலத்தில் விழாக்கள் ஆரம்பமாயின. இதற்குமுன் இத்தஸ்தலங்கள் யாவற்றிலும் ஒரேகாலத்தில் விழாக்கள் நடந்தமை அருமையாம். இந்த ஐந்து ஸ்தலங்களுக்கும் செல்லும் யாத்திரிகர்களுக்குப் புகைரதப்பகுதியாரால் மலிவு துண்டுகள் கொடுக்கப்பட்டன. இது காரணமாக இலங்கைப் புகைரத ஸ்தானங்களெல்லாம் சனத்திரள்கள் தேங்கி நின்றன. கதிர்காமத்துக்கு முந்திய வருடங்களிலும் பார்க்க இவ்வருடம் சனங்கள் அதிகஞ் சென்றனர். வதுளையிலுள்ள முத்துயங்கனு புராதனமான ஓர் புத்த ஸ்தலம். புத்தர் இலங்கைக்கு வந்தபோது இந்த ஸ்தலத்துக்குஞ் சென்றதாகச் சொல்லப்படுகின்றது.

## காரைநகர்ச் சைவமகாசபை.

நிகழும் குரோதன வருஷம் ஆடி மீ" ௧௮உ (2—8—25) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஆறுமணியளவில் காரைநகர், களபூமி திக்கரை முருகமூர்த்தி கோயில் மண்டபத்தில் ஸ்ரீ ஆறுமுகம்பிள்ளைநொத்தாரிசு அவர்களால் திருநீலகண்டநாயனார் திவ்விய சரித்திரம் பக்கவாத்திய சகிதமாய்ப் பிரசங்கஞ் செய்யப்பெற்றது. பிரசாரகர் நாயனாரின் இடையறாத் தியானத்தையும் அன்புமுதிர்ச்சியையும் எடுத்துக்காட்டி நாங்களும் அன்னவர்போல் நற்பதவியடைவதற்கு ஆலயதரிசனமும் சிவத்தியானமும் அவசியமென்றும் அதற்கு இன்றியமையாத சைவவித்தியாலயமொன்று அப்பகுதியில் ஸ்தாபிக்கப்படுதல்வேண்டு மென்றும் பிரசங்க ஈற்றில் கூறினர். அதன்பின் காரியதரிசி தொடுவாயிராச்சியப்பகுதியிலிருக்கும் அப்பகுதியார் அந்தப் பகுதியில் ஓர் இராப் பள்ளிக்கூடம் வைத்து நடத்தவேண்டுமெனப் பன்முறை கடிதம் வரைந்திருக்கின்றார்களென்றும், ஊரிலுள்ளவர்கள் அதற்கு வேண்டிய ஓர் சிறு கட்டடம் அமைத்துக் கொடுப்பார்களானல் அதிசமீபத்தில் இராப்பள்ளிக்கூடம் ஆரம்பிக்கப்படுமென்றுங் கூறினர். அதுவரையும் அடி சபை மண்டபத்தில் நடாத்தப்படும் தேசிய வகுப்பிற்குப் பிள்ளைகளை அனுப்பிவைக்குமபடியும் அங்கே வந்து கல்வி பயிலுவதினால் தேவாரம் திருவாசகம் இலக்கணம் இலக்கியம் முதலியன பயில்வதுடன் காரை ஐக்கிய மலாயசங்கத்தாரால் ஸ்தாபிப்பதற்குள்ள நெசவு முதலிய கைத்தொழில் பழகுவதற்குரிய வசதிகள் ஏற்படுமென்றும் அதனால் ஆன்மஞானம் பெறுவதுடன் லௌகிகத்திற்கு வேண்டிய பொருள் ஈட்டுவதற்கு ஏதுவாகுமென்றும் சைவமகாசபையார் உத்தேசித்திருக்கும் குருகுல வித்தியாலயம் நிறைவேறுவதற்கு ஒவ்வொருவரும் ஒத்துழைத்தல்வேண்டு மென்றும் அப்படியானல் எங்கள் தேசம் பண்டைக்காலம்போலச் சகல கலைஞானங்களிலும் மேம்பட்டுச் சகல ஐசுவரியங்களையும் பெற்று இனிது வாழுமெனக் குறிப்புரை கூறியபின்னர் பத்துமணியளவில் கூட்டம் தேவாரபாராயணத்துடன் இனிது நிறைவேறியது.

கடித.

## தலைமை ஆசிரியர்மீது பாரிக்கப்பட்ட குற்றம்.

சென்ற ஏப்பிரல் மாதம் 10-ந் திகதி பாணந்துறையிலே "பிறின்ஸ் ஒவ் வேல்ஸ்" கல்லூரி ஆசிரியருள் ஒருவராகிய மிஸ்ரர் டபிள்யு. என். விஜயவாடன என்பவர் தம்மை அடி கல்லூரித்தலைமையாசிரியராகிய மிஸ்ரர் பி. ரி. ஜெயசூரியா என்பவர் சருவிக்காயப்படுத்தினரென அங்குள்ள பொலிஸ்கோட்டில் வழக்குத் தொடர்ந்தார். தலைமை யாசிரியராகிய மிஸ்ரர் ஜெயசூரியாவும் பாணந்துறைப் பொலிஸ் நீதிபதியாகிய மிஸ்ரர் அலுவிகாரை யவர்களும் அத்தியந்த நண்புடையராதலினால் தனது வழக்கில் தக்க நியாயத்தீர்ப்புக்கிடைக்க மாட்டாதென்றும், அவ்வழக்கு ஓர் ஐரோப்பிய நீதிபதியால் விசாரணை செய்யப்படவேண்டுமென்றும் குறித்த வழக்காளியாகிய மிஸ்ரர் விஜயவாடன என்பவர் சுப்பிறீங்கோட்டுக்கு மனுப்பண்ணினர். சுப்பிறீங்கோட்டாருடைய கட்டளைப்படி அவ்வழக்குச் சென்ற வியாழக்கிழமை கொழும்புப் பொலிஸ்கோட்டிலே மிஸ்ரர் டபிள்யு. ஓ. ஸ்ரீவின்ஸ் அவர்களால் விசாரணை செய்யப்பட்டது. குறித்த வழக்காளியின் முறைப்பாடாவது:—"நான் வழக்கம்போலவே சென்ற ஏப்பிரல் மாதம் பத்தாந்திகதி அடி கல்லூரிக்குச் சென்றேன். தலைமை ஆசிரியர் தன்னை வந்து காணும்பொருட்டு ஒருவரிடம் சொல்லி அனுப்பினர். நான் அவருடைய வீட்டுக்குப்போய் வெளிச்சாலையில் நின்றேன். அவர் என்னை அறைக்குள் வரச்சொன்னர். அப்பொழுது நான் உள்ளே போனேன். குறித்த எதிரி என்கையைப் பிடித்து இழுத்தபின் கதவைப்பூட்டி என் மார்பில் அடித்தார். எதிரி பின்னரும் கையில் ஓர் பிரம்பை எடுத்து 'இந்த விஷயங்களைப்பற்றி மிஸ்ரர் உவால்ரர் டி. சொய்சாவுக்குச் சொன்னவர் நீரல்லவா?' எனக்கூறி எனது வலதுதொடையில் அடித்தார். மேலும் அவர் எனது தொண்டையைப் பிடித்து நெரித்து 'உன்னைக்கொன்று உனது பிரேதத்தைப் பக்கத்திலோடும் ஆற்றிலிடுவேன்' என்றுபயமுறுத்தினர். பின்னரும் அவர் என்னைத் தனது போஜன அறைக்குள் இழுத்துச் சென்று அங்கேயும் என்னை அடித்தார்" என்பதாம். நீதிபதி அடி வழக்கை விசாரணை செய்து எதிரிக்கு இருபது ரூபா அபராதம் விதித்தனர்.

## முடிமன்னர்களின் வீண் செலவு.

உலகத்திலுள்ள அரசர்களில் சியம் அரசரே அதிகச் செலவு செய்கிறாராம். அடுத்த செலவாளி இத்தாலி யரசராம். சூரியாஸ்தமனத்தை யறியாத ஆங்கில ஏகாதிபத்தியமோ, தன் சக்கரவர்த்தி சியம் இத்தாலி யரசர்களைப்போல அவ்வளவு வீண் செலவு செய்ய இடங்கொடுக்கவில்லை. உலகத்திலுள்ள தற்கால முடிமன்னர்களின் சம்பளமும் செலவும் வருமாறு:—

| | டாலர்கள், |
|---|---|
| சியம் அரசர் | 3,500,000 |
| இத்தாலி அரசர் | 3,200,000 |
| இங்கிலாந்து அரசர் | 2,906,000 |
| ஜப்பான் சக்கரவர்த்தி | 2,250,000 |
| ஸ்பெயின் அரசர் | 1775,000 |
| பெல்ஜிய அரசர் | 1,075,000 |
| செர்விய அரசர் | 955,000 |
| ருமேனிய அரசர் | 500,000 |
| ஸ்வீடன் அரசர் | 433,900 |
| பல்கேரியா அரசர் | 400,000 |
| டென்மார்க் அரசர் | 300,000 |
| நார்வே அரசர் | 244,000 |

நாகரிகமுற்ற ஐரோப்பா தன் அரசர்களை ஏறக்குறைய பொம்மையரசர்களாக்கிவிட்டது. எனினும் ஐரோப்பா இன்னமும் கோடிக்கணக்கான ஏழை மக்கள் பணத்தை இவ் அரசர்களுக்காக வீண் செலவு செய்துவருகிறது என்று நியூயார்க் 'நேசன்' பத்திரிகை கூறுகின்றது. ஜர்மனியின் மாஜி சக்கரவர்த்தியான கைஸர் ஓராண்டிற்கு ஐம்பது லட்சம் டாலர் விழுங்கிவந்தனராம். ஆஸ்திரிய சக்கரவர்த்தியும் இவ்வளவு வீண் செலவு செய்துவந்தார். ஸார் சக்கரவர்த்தியோ ஏழை ருஷிய மக்களின் பணத்தில் 85 லட்சம் டாலர் உறிஞ்சிவந்தார், இவர்களது மணிமுடிகளும் பொன்னுசனங்களும் புரண்டுபோயின. எனினும் ஐரோப்பிய பிரதேசங்களிலும் இன்னும் எவ்வளவோ வீண் செலவு செய்யப்படுகிறதாம். —குமரன்.

## தேகவியோகம்.

மண்டைதீவு, திருவெண்காட்டுப் பிள்ளையார் கோவிலில் நெடுங்காலம் அர்ச்சகராயுள்ளவரும் சாந்தம் சிவபக்தி அறிவு தயை ஆசாரக்கிரமம் முதலிய நற்குணங்கள் பூண்டவரும் அடி தீவுக் கந்தசுவாமிகோயில் அர்ச்சகர் பிரமஸ்ரீ இ ஞானசேகரக்குருக்களவர்களின் பெரியதந்தையாயுள்ளவருமாகிய பிரமஸ்ரீ சுப்பிரமணியஐயர் சுந்தரஐயரவர்கள் இந்த ஆடி மீ" உ௮உ செவ்வாய்க்கிழமை இரவு சிவத்தியானமுடையவராய்த் தேகவியோகமாயினர். அந்தியகாலத்திலே இவரின்வயது 85. இவரின் அபரக்கிரியை அடி ஞானசேகரக்குருக்களவர்களாலேயே நடத்தப்பட்டது. இவரின் பிரிவாற்றது வருந்தும் சுற்றமித்திராதியோருடன் நாமுமனுதாபமுறுகின்றேம் —கடித.

## ஹிஸ்டீரியா என்னும் மூர்ச்சைவியாதி நிவர்த்தியாயிற்று.


எச் ஐ திருவானைக்காவல் சீதாராமய்யரவர்கள் பின்வருமாறு சென்னைக் கேஸரி குடீரம் கம்பனியாருக்கு எழுதினர்.

4 வருஷகாலமாய் அடிக்கடி (பஹிஷ்டை காலத்தில் வரும் ஹிஸ்டீரியா) மூர்ச்சைவியாதியால் வெகு ஆபத்தாய்ப்படுத்திருந்த என் பாரியாளுக்கு உம்மிடமிருந்து தருவித்த "லோத்ராவி"ரூப யோகத்தால் சம்பூரணகுண முண்டாயிற்று.

"கேஸரி குடீரம்"
ஆயுர்வேத ஔஷதசாலை,
எழும்பூர், மதராஸ்.

Y. 35. A.)


## ரூபா 50 இனும்.


எனது வளப்புப்பிள்ளை கிருஷ்ணன் அல்லது தம்புவைப்பற்றிய விபரம் எனக்கு அல்லது பராபரிப்புக்காரர் யாழ்ப்பாணம் வண்மேற்கு ஓட்டுமடத்தடி இ பொன்னம்பலமவர்கட்கு தெரிவிப்பவருக்கு 50 ரூபா இனும் கொடுக்கப்படும்.

விபரம்:—உயரம் 3½ அடிவரையில், சிவலை, மொட்டைத்தலை, நெற்றியில் பச்சை, வயது 12.

மே மீ". 25-ந் திகதி யாரோ எனது சகோதரர் வீட்டைக்காட்டும்படி கேட்டு ஏமாற்றிக் கூட்டிக்கொண்டுபோய் விட்டார்.

இங்ஙனம்
சி. கந்தவனம்
செட்டுவர்சியர்,
செறம்பான். F. M. S.

(Mis 691.)


## ஆப்ரேஷன் இல்லாமலே சுலபமாய் நிவர்த்தியாய்விட்டது.


கேஸரியின் விலையுயர்ந்த ஔஷதங்களின் குணத்தை மிகவும் மெச்சினேன் 'லோத்ரா' வைப்பற்றி என் அநுபவத்தைக்கீழேகுறிப்பிடுகின்றேன். அதற்குச்சமமான ஔஷதம் பூலோகத்தில் வேறெதுவுமில்லையெனத்திண்ணமாய்க் கூறுவேன். என்மனைவிக்கு வயிற்றில் இடதுபாகத்தில் ஒருவிதமான வலி இருந்துவந்தது மேனாட்டு (இங்கிலீஷ்) வைத்தியம் எல்லாம் பிரயத்தனப்பட்டுக் குணமடையவில்லை. பின் ராஜமந்திரி ஆஸ்பத்திரிக்கு அழைத்துப்போனதில் உடனே கர்ப்பபையில் சாஸ்திர சிகிச்சைசெய்யவேண்டு மென்றார்கள். இது என் மனைவிக்குச் சம்மதமில்லாததால் பெருங்கஷ்டத்துடன் ஊர் வந்துசேரும் தருணத்தில் வரப்பிரசாதிபோல் "லோத்ரா"

யாபகத்திற்கு வந்ததால் சென்னைக்கு ஆப்ரேஷனுக்கு வருமுன் இதை உபயோகித்து பார்க்க எண்ணங் கொண்டவனாய் தந்திமூலமாய் ஆடர் கொடுத்து ஔஷதத்தை தருவித்துக்கொண்டு முதல்வேளை மருந்து கொடுத்த மாத்திரத்திலேயே குணம் காண ஆரம்பித்தது இரண்டாம் வேளை மருந்து கொடுத்தவுடன் 8-மணிநேரம் நல்ல நித்திரைசெய்தாள். மறுபடி மூன்றும்வேளை மருந்து மறுநாள் கொடுத்த மாத்திரத்தில் வலியெல்லாம நின்றுவிட்டது. நாளுக்கு நாள் சுகமடைந்து வந்தாள். சத்தியமாய் "லோத்திரா" விலுல் ஆபரேஷனில் தான் நிவிர்த்தியாக வேணுமென்று இங்கிலீஷ் டாக்டர்கள் சொன்னவியாதி ஆபரேஷன் இல்லாமலே சுலபமாய் நிவர்த்தியாய் விட்டது என்று காகிநாடா, கோதாவரி டிஸ்டிரிக்டு போர்ட் இஞ்சினியர் ஆபீஸ், மகா-ா-ா-ஸ்ரீ பி. சுப்பாராயுடு அவர்கள் எழுதுகிறார்.

இந்த ஔஷதத்தைப் பற்றிய புத்தகத்திற்கு உடனே எழுதுங்கள்.

"கேசரி குடீரம்"

ஆயுர்வேத ஔஷதசாலை,

எழும்பூர், மதராஸ்.

(Y. 35. B)

## அடைவுநகை விற்பனவு விளம்பரம்.

——:O:——

1893-ம் ஆண்டின் 8-ம் இலக்கச் சட்டத்தின்படி லைசென்சு பெற்று அடைவுபிடிக்கும் வண் மேற்கு நா. சித. நா. சிதம்பரஞ்செட்டியாரிடம் அடைவுவைக்கப்பட்டு இப்போது தவணைதப்பி டை சட்டத்தின் 12-ம் பிரிவின்படி பிரசித்தஏலத்தில் விற்கப்படவேண்டிய நகைகளின் விபரம்

நம்ப. திகதி ரூபா. ஊரும்பெருயம் நகைகள்விபரம்.

1924-ம்ஷு ஜூன்மீ

454 25 7 சுத்தரோடை சவுரி பிலிப்பு பொன்காதப்பூ சோடி 1

466 27 35 நல்லூர் சிதம்பரபத்தர் சுப்பிரமணியபத்தர் பொன் கைச்சங்கிலி 1

ஜூலாய்மீ

478 3 6 மாவிட்டபுரம் கே. மதியாபரணம் பொன்சத மோதிரம்

482 3 25 பாசையூர் சுவாம்பிள்ளை சவுரியர் பொன்சங்கிலி

497 8 50 வேலணை செல்லையா சுப்பிரமணியம் பொன் ஒட்டுக்கம்பிப்பூராணட்டியல் 1

507 10 11 நயினாதீவு ஆறுமுகம் இளையதம்பி சாதாமோதிரம் 1-ம். அரும்புமோதி. 2-ம்.

528 16 8 கரையூர் சாவித்தப்பிள்ளை மரியாம்பிள்ளை பொன்கல்வைத்த சவுத்தோர் 1

545 19 5 மாவிட்டபுரம் முத்து சின்னத்துரை, பொன் சிறு சாதா மோதிரம் 1

549 20 26 றயில்றோட்டு கதிரேசு நாகமுத்து, பொன் சாதா மோதிரம் 1

554 21 22 சோனகதெரு மீராசாகிபு முகமது சுலுத்தான், பொன் சவடிக்கொடி 1

557 32 12 திருநெல்வேலி பெரியதம்பி செல்லையா, சாதாமோதிரம் 2ம், அரும்பு மோதி.4

558 22 6 றயில்றோட்டு கதிரேசு நாகமுத்து, பொன் வாளி சோடி 1

560 22 8 சோனகதெரு அ அப்துல்கரீம் பொன் அச்சரக்கூடு 1

561 22 10 கைதடி வேலுப்பிள்ளை இளையதம்பி, பொன் K V E விலாசம் மோதிரம் 1

563 23 10 சண்டிக்குளி கனகசபை சின்னையா, பொன அட்சரக்கூடு 1

571 25 13 றயில்றோட்டு கதிரேசு நாகமுத்து பொன்சரட்டு அட்டியல் 1

575 26 110 நவாலி பண்டாரி குட்டி பொன் தாலிக்கொடி 1

587 28 30 கொழும்புத்துறை நல்லதம்பி தம்பு பொன் பட்டணக்காப்புச் சோடி 1

592 29 13 ஆனைக்கோட்டை நியேர் கிரகோரி காதப்பூச் சோடி 1, கொண்டைப்பூ 1.

593 29 55 சோனகதெரு மரக்காயர் சாகுலகமீது பொன கொலுசுக்காப்பு சோடி 1

ஆகஸ்ட்மீ

605 3 9 சண்டிக்குளி பொன்னையா துரைராசா பொன்மோதிரம் 1

613 4 1 தாவடி கணபதிப்பிள்ளை சுப்பையா பட்டணக்காப்புச்சோடி1, கம்பிப்பூராணட்டியல் 1, கல் சவுத்தோர் 1, கொண்டைப்பூ 1.

615 5 26 சேணியதெரு செல்லப்பா துரைராசா சிறு கம்பிப்பூராணட்டியல் 1.

விற்பனவு:—குரோதனஷு ஆவணிமீ 2-உ (17—8—25) திங்கட்கிழமை பகல் 10 மணியளவில் எடுபட்ட நகை பிறகீங்கலாக டையார் கடையில் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

சி. ஐயம்பிள்ளை உடையார்,

வெந்திஸ்மேஸ்தர்.

(Mis 689)

25-8-23 ல் சென்னையில் நடந்த தமிழ்வைத்திய கான்பரன்ஸ் & கண்காட்சியில் இவர் மருந்துகள் தேவ ஔஷதங்களென்று தங்க மெடலும் வைத்தியபதிப்பட்டமும் பெற்றவர்.

